தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மு. ஜெகதீசன் Ph.D.,
உதவி மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 14-7-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஆடிப்பட்ட விலை முன்னறிவிப்பு

தமிழ்நாட்டில், ஆடிப்பட்டம் முக்கிய மானாவாரி சாகுபடி பருவமாகும். இக்காலகட்டத்தின் பயிர் உற்பத்தி தென்மேற்கு பருவமழையை சார்ந்துள்ளது. பெரும்பாலும் தானியங்கள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் காய்கறிகள் இக்காலகட்டத்தில் சாகுபடி செய்யப்படுகின்றது. இதற்கு ஏதுவாக விவசாயிகள் தங்கள் நடவு முடிவுகளை மேற்கொள்கின்றனர். இந்நடவு முடிவு மேற்கொள்வதற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கரீப் பருவ விலை முன்னறிவிப்பை மேற்கொள்கிறது. மக்காச்சோளம், சோளம் மற்றும் சின்னவெங்காயத்தின் விலை முன்னறிவிப்பு வெளியிடப்பட்ட நிலையில் மீதமுள்ள பயிர்களின் விலை முன்னறிவிப்பு கீழே வழங்கப்பட்டுள்ளது. மேலும் விவசாயிகள் தங்கள் நடவு முடிவுகளை சந்தை ஆலோசனைக்கு ஏற்ப மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எள்**

உலகளவில் இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகள் எள் உற்பத்தியில் முன்னணி வகிக்கின்றன. துருக்கி, தென் கொரியா, ஜப்பான், சிரியா, நெதர்லாந்து, ஐக்கிய அரபுநாடுகள் மற்றும் சிங்கப்பூர் ஆகியவை முக்கிய இறக்குமதி நாடுகளாகும். இந்தியாவில் மத்தியப்பிரதேசம், உத்திரப்பிரதேசம், இராஜஸ்தான், தமிழ்நாடு, ஆந்திரப்பிரதேசம், கர்நாடகா, மகாராஷ்டிரா மற்றும் குஜராத் ஆகிய மாநிலங்கள் எள் சாகுபடியில் முக்கிய பங்கு வகிக்கின்றன.

தமிழ்நாட்டில், ஈரோடு, கரூர், தஞ்சாவூர், கடலூர் மற்றும் சேலம் மாவட்டங்கள் மாநிலஎள் உற்பத்தியில் முக்கிய பங்கு வகிக்கின்றன. தமிழ்நாட்டில், எள் சாகுபடிதை (டிசம்பர் - ஜனவரி) மற்றும் கார்த்திகை (நவம்பர் –டிசம்பர்) பட்டங்களில் பரவலாக

பயிரிடப்படுகிறது. மேலும் ஆடிப்பட்ட எள் சாகுபடி தமிழ்நாட்டில் தருமபுரி, கடலூர், விழுப்புரம் மற்றும் அரியலூர் மாவட்டங்களில் மேற்கொள்ளப்படுகிறது.

இந்தியாவின், எண்ணெய் வித்துக்கள் கூட்டமைப்பின் புள்ளி விவரங்களின் படி 2015-16ம் ஆண்டின் கரீப் பருவஎள் நடவு 0.79 இலட்சம் எக்டராகும். மேலும் இக்காலகட்டத்தில் சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் எள் விலை கடந்த ஜுன் 2014ம் மாதத்தைக் காட்டிலும் 10.84 சதவீதம் குறைந்து ஜுன் 2015ல் குவிண்டாலுக்கு ரூ.6,291 என விற்பனையாகிறது.

சிவகிரி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தின் 15 வருட எள் சந்தை விலைகளை ஆய்வுசெய்து, வர்த்தக ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, செப்டம்பர் - அக்டோபர், 2015ல் அறுவடைக்கு வரும் தரமான எள்ளின் பண்ணை விலை குவிண்டாலுக்கு ரூ.5,500 – 5,700 வரை இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் ஏற்றுமதி வாய்ப்பு மற்றும் பருவமழையை பொறுத்து விலையில் மாற்றம் இருக்கும். இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் நடவு முடிவுகளை மேற்கொள்ளுமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

**நிலக்கடலை**

உலகளவில் நிலக்கடலை உற்பத்தியில் சீனாவிற்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. ஆசியா, ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்கா கண்டங்கள் உலகின் 97 சதவீத சாகுபடி பரப்பு மற்றும் 95 சதவீத உற்பத்தியைக் கொண்டுள்ளன. இவற்றுள் ஆசிய நாடுகள் 50 சதவீத சாகுபடி பரப்பு மற்றும் 64 சதவீத உற்பத்தியைக் கொண்டுள்ளன.

இந்தியாவில் பெருமளவில் நிலக்கடலை சாகுபடி மானவாரியாக மேற்கொள்ளப்படுகிறது. குஜராத், ஆந்திரா, தமிழ்நாடு மற்றும் இராஜஸ்தான் மாநிலங்கள் 85 சதவீத உள்நாட்டு உற்பத்தியைக் கொண்டுள்ளன. கடந்த 2013-14ம் வருடத்தில், இந்தியாவில் நிலக்கடலை 5.1 இலட்சம் டன்கள் ஏற்றுமதி செய்து ரூ.31.88 பில்லியன் அளவிற்கு வர்த்தகம் மேற்கொள்ளப்பட்டது. தென்கிழக்கு ஆசிய நாடுகளான வியட்நாம், மலேசியா, இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து ஆகியவை முக்கிய ஏற்றுமதி நாடுகளாகும்.

கடந்த 2013-14ல் 9.9 சதவீத உற்பத்தி பங்களிப்புடன் தமிழ்நாடு மூன்றாம் இடத்தில் உள்ளது. தமிழ்நாட்டில் 65 சதவீத நிலக்கடலை உற்பத்தி திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், நாமக்கல், சேலம், ஈரோடு, புதுக்கோட்டை மற்றும் காஞ்சிபுரம் மாவட்டங்களிலிருந்து பெறப்படுகிறது.

நிலக்கடலையின் அறுவடை விலை முன்னறிவிப்பிற்கு ஏதுவாக தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் உள்ள வேளாண்மை மற்றும் ஊரகமேம்பாட்டு ஆய்வு மையத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், சேவூர் மற்றும் திண்டிவனம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடங்களில் கடந்த 18 வருடங்களாக நிலவிய மாதந்திர நிலக்கடலை விலை மற்றும்

வர்த்தக ஆய்வுகளை மேற்கொண்டது.சந்தைஆய்வு முடிவுகளின் படி செப்டம்பர் - அக்டோபர், 2015ம் ஆண்டில் நிலக்கடலை காய் விலை திருப்பூர் மாவட்ட சேவூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் குவிண்டாலுக்கு ரூ.5,200 - 5,500ஆகவும், திண்டிவனம் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தில் குவிண்டாலுக்கு ரூ.5,500–5,800 வரை இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளது. இதன் அடிப்படையில் விவசாயிகள் தங்கள் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

பருத்தி

2015-16ல், உலகளாவிய பருத்தி உற்பத்தி சரிவு மற்றும் அதிக ஏற்றுமதி மற்றும் நுகர்வு எதிர்பார்ப்பு இருந்த போதிலும் இந்திய பருத்தி கழகத்தின் கையிருப்பு (1.46 மில்லியன் டன்கள்) விலை நிர்ணயத்தில் முக்கிய பங்கு வகிக்கும். ஆய்வு முடிவுகளின் படி வரும் ஜனவரி–பிப்ரவரி, 2016ல் விலை குறைந்து, குறைந்தபட்ச ஆதார விலைக்கு நிகராக தரமான நீள் இழை பருத்தி சராசரியாக குவிண்டாலுக்கு ரூ.4,000 முதல் ரூ.4,200 வரை கிடைக்கும் என கணிக்கப்பட்டுள்ளது. எனவே விவசாயிகள் இந்த விலையின் அடிப்படையில் விதைப்பு முடிவுகளை எடுக்குமாறு பரிந்துரைக்கப்படுகின்றனர்.

<u>மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்
வேளாண் மற்றும் ஊரகமேம்பாட்டுஆய்வு மையம்
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்- 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்பவிவரங்களுக்கு, தொடர்பு கொள்ளவும்:</u>

பேராசிரியர் மற்றும் தலைவர்
எண்ணெய் வித்துக்கள் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண் - 0422-2450812

பேராசிரியர் மற்றும் தலைவர்
பருத்தித் துறை
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி எண்: 0422-2456297

உதவி மக்கள் தொடர்பு அலுவலர்